சென்னை விமானநிலையத்தில் நடிகர் கருணாஸிடம் 40 தோட்டாக்கள் பறிமுதல்

சென்னை, ஜூன் 2: சென்னை விமான நிலையத்தில், நடிகர் கருணாஸிடம் 40 துப்பாக்கி தோட்டாக்களை பாதுகாப்பு படையினர் ஞாயிற்றுக்கிழமை பறிமுதல் செய்தனர்.

நடிகரும், முக்குலத்தோர் புலிப்படை கட்சியின் தலைவருமான கருணாஸ் திருச்சி செல்வதற்காக சென்னை விமான நிலையத்துக்கு ஞாயிற்றுக்கிழமை காலை வந்தார். பாதுகாப்பு படையினர் அவருடைய உடைமைகளை சோதனை செய்தபோது, கைப்பையில் 40 துப்பாக்கி தோட்டாக்கள் இருந்தன.

அந்த தோட்டாக்களை பறிமுதல் செய்த பாதுகாப்பு படையினர், நடிகர் கருணாஸின் திருச்சி பயணத்தை ரத்துசெய்து, அவரிடம் விசாரணை நடத்தினர். தன்னிடம் உரிமத்துடன் துப்பாக்கி இருப்பதாகவும், அந்த துப்பாக்கிக்கான தோட்டாக்கள்தான் இவை என்றும், தோட்டாக்களை பையில் வைத்திருப்பது தெரியாமல், அந்த பையை தான் எடுத்து வந்துவிட்டதாகவும் விளக்கம் அளித்தார்.

இதையடுத்து, துப்பாக்கிக்கான ஆவணங்களை சரிபார்த்த அதிகாரிகள், பின்னர் அந்த தோட்டாக்களை நடிகர் கருணாஸிடம் ஒப்படைத்தனர்.

கார் பள்ளத்தில் கவிழ்ந்து தம்பதி உயிரிழப்பு; மகள் படுகாயம்

மணப்பாறை அருகே ஞாயிற்றுக்கிழமை காலை பள்ளத்தில் கவிழ்ந்துகிடக்கும் கார். (உள்படம்) உயிரிழந்த சசிதரன், ராஜஸ்ரீ.

மணப்பாறை, ஜூன் 2: திருச்சி மாவட்டம், மணப்பாறை அருகே ஞாயிற்றுக்கிழமை காலை சாலையோரத் தடுப்பில் மோதி கார் பள்ளத்தில் கவிழ்ந்ததில் தம்பதி உயிரிழந்தனர். அவர்களது 13 வயது மகள் பலத்த காயமடைந்தார்.

திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லியைச் சேர்ந்தவர் சசிதரன் (41). இவர், தனது மனைவி ராஜஸ்ரீ (40), 13 வயது மகள் ஆகியோருடன் சனிக்கிழமை இரவு தனது காரில் பழனிக்குப் புறப்பட்டார். இவர்களது கார், ஞாயிற்றுக்கிழமை காலை மணப்பாறைக்கு முன்னதாக திருச்சி - திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் அஞ்சாலிகளம் பகுதியில் சென்றபோது, திடீரென கட்டுப்பாட்டை இழந்து சாலையோர பாலத் தடுப்புச் சுவரில் மோதி அருகிலிருந்த 10 அடி பள்ளத்தில் கவிழ்ந்து தீப்பிடித்தது.

இதைக்கண்ட அப்பகுதி மக்கள் பலத்த காயமடைந்த ராஜஸ்ரீ மற்றும் சிறுமியை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். ஆனால், காரின் முன்பகுதியில் சசிதரனின் கால்கள் சிக்கிக்கொண்டதால் அவரை மீட்க முடியாமல் போராடினர். தீயணைப்புத் துறை வீரர்கள் மற்றும் தனியார் விபத்து மீட்புக் குழுவினரால், சசிதரன் மீட்கப்பட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். எனினும், அவர் வழியிலேயே உயிரிழந்தார். ராஜஸ்ரீ சிகிச்சை பலனின்றி மருத்துவமனையில் உயிரிழந்தார். 13 வயது சிறுமிக்கு, திருச்சி தனியார் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

ஏழுமலையான் தரிசனம்: 24 மணி நேரம் காத்திருப்பு

திருப்பதி, ஜூன் 2: திருமலை ஏழுமலையானை தரிசிக்க பக்தர்கள் தர்ம தரிசனத்தில் 24 மணி நேரம் காத்திருந்தனர்.

திருமலையில் ஞாயிற்றுக்கிழமை காலை நிலவரப்படி, வைகுண்டம் காத்திருப்பு அறைகளில் உள்ள 31 அறைகளைக் கடந்து வெளியே சீலாதோரணம் அருகில் உள்ள தரிசன வரிசையில் பக்தர்கள் தரிசனத்துக்காக காத்திருந்தனர்.

தர்ம தரிசனத்துக்கு (தரிசன டோக்கன்கள் இல்லாதவர்கள்)24 மணி நேரமும், ரூ. 300 விரைவு தரிசனத்துக்கு 3 முதல் 4 மணி நேரமும், நேரடி இலவச தரிசன டோக்கன்கள் பெற்ற பக்தர்களுக்கு 3 முதல் 4 மணி நேரமும் ஆனது.

அலிபிரி நடைபாதை வழியாக மதியம் 2 மணி வரை 12 வயதுக்குட்பட்ட குழந்தைகள், பக்தர்களும் அவர்களின் பெற்றோர்களும், இரவு 10 மணி வரை அனைத்து பக்தர்களும் அனுமதிக்கப்படுகின்றனர்.

ஏழுமலையானை சனிக்கிழமை முழுவதும் 78,689 பக்தர்கள் தரிசனம் செய்தனர்; இவர்களில் 34,888 பேர் தலைமுடி காணிக்கை செலுத்தினர். ஏழுமலையான் கோயிலில் பக்தர்கள் உண்டியல் மூலம் சமர்ப்பித்த காணிக்கைகளைக் கணக்கிட்டதில், ரூ. 3.54 கோடி வசூலானதாக தேவஸ்தானம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் பாஜக தாக்கத்தை ஏற்படுத்தும்

வேலூர், ஜூன் 2: மக்களவைத் தேர்தல் வாக்குப்பதிவில் தமிழகத்தில் பாஜக தாக்கத்தை ஏற்படுத்தும் என்று தமிழிசை செளந்தரராஜன் தெரிவித்தார்.

வேலூர் மாவட்டம், குடியாத்தம் பகுதியிலுள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் தனது தந்தை குமரி ஆனந்தனின் பிறந்த நாளை முன்னிட்டு அவரை நேரில் சந்தித்து ஆசீர்வாதம் பெறுவதற்காக தெலங்கானா முன்னாள் ஆளுநர் தமிழிசை செளந்தரராஜன் காட்பாடி ரயில் நிலையத்துக்கு ஞாயிற்றுக்கிழமை வந்தார்.

ரயில் நிலையத்தில் பாஜகவினர் சிறப்பான வரவேற்பு அளித்தனர். பின்னர் தமிழிசை செளந்தரராஜன் செய்தியாளர்களிடம் கூறியது:

நரேந்திர மோடி மூன்றாவது முறையாக பிரதமராக வருவதற்கான வாய்ப்புகள் உருவாகியுள்ளது. இது மகிழ்ச்சி அளிக்கக்கூடியது.

தமிழகத்தில் திராவிட மாடல் ஆட்சி என்று கூறுகின்றனர். தற்போது அந்த திராவிட மாடல் எந்த அளவுக்கு தோல்வி அடைந்துள்ளது என்பது தெரிய வந்துள்ளது. கொலை, கொள்ளை, கஞ்சா உள்ளிட்ட பல் வேறு பிரச்னைகளால் தமிழகத்தின் சட்டம் ஒழுங்கு சீர் கெட்டுள்ளது.

தமிழகத்தில் மின்சாரம், பால் உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்கள் விலையேற்றத்தால் மக்கள் கடும் அவதிக்குள்ளாகியுள்ளனர். இதனால், திமுக அரசு மீது மக்கள் வெறுப்படைந்துள்ளனர். மக்கள் இதை உணர வேண்டும்.

நாடு முழுவதும் மக்கள் வளர்ச்சியை நோக்கி, ஊழலை எதிர்த்து, வாக்களித்திருப்பது போல தமிழகத்திலும் புரட்சி செய்ய வேண்டும்.

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன் கார்கே அதிகப்படியான இடங்களில் வெற்றி பெறுவோம் என கனவு காண்கிறார். அப்படி ஒருபோதும் நடக்காது. திமுக கூட்டணி கட்சிகளுக்கு எதிராக வாக்குகள் சிதறியுள்ளன. அதிலும்கூட பாஜக ஒரு தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய வகையில்தான் மக்கள் வாக்களித்துள்ளனர்.

இதனால், தமிழகத்தில் கருத்து கணிப்புகளைவிட அதிகளவில் பாஜக வெற்றிபெறும்எனஎதிர்பார்க்கிறோம் என்றார். பாஜக வேலூர் மாவட்ட தலைவர் மனோகரன் மற்றும் கட்சி நிர்வாகிகள் உடனிருந்தனர்.

போரூர் ஏரியில் 3 வயது மகனை வீசிச் சென்ற தந்தை!

பொதுமக்களால் மீட்பு

ஆவடி, ஜூன் 2: குடும்பப் பிரச்னையில் போரூர் ஏரியில் ஞாயிற்றுக்கிழமை தந்தை வீசிச் சென்ற 3 வயது சிறுவனை பொதுமக்கள் மீட்டு போலீஸாரிடம் ஒப்படைத்தனர்.

தாம்பரம் - மதுரவாயல் புறவழிச்சாலை, போரூர் ஏரிப் பகுதியில் இருசக்கர வாகனத்தில் ஒருவர் சிறுவனுடன் ஞாயிற்றுக்கிழமை வந்தார். பின்னர், அவர் திடீரென அந்தச் சிறுவனை தூக்கி போரூர் ஏரி நீரில் வீசிவிட்டு, இருசக்கர வாகனத்தில் வேகமாக சென்றார்.

இதைப் பார்த்து, ஏரியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த சிலர் உடனடியாக தண்ணீரில் நீந்திச்சென்று சிறுவனை உயிருடன் மீட்டனர். பின்னர், முதலுதவி சிகிச்சைக்கு பிறகு, சிறுவனை போரூர் போலீஸாரிடம் பொதுமக்கள் ஒப்படைத்தனர்.

விசாரணையில், ஏரியில் சிறுவனை வீசிவிட்டுச் சென்றது சென்னை தலைமைச் செயலக காலனியைச் சேர்ந்த மோகன்ராஜ் என்பதும், மனைவி பிரியாவுடன் ஏற்பட்ட தகராறில், அவரை வீட்டில் பூட்டி வைத்துவிட்டு, தனது மகன் தர்ஷனை (3) தூக்கிவந்து போரூர் ஏரியில் வீசிச் சென்றதும் தெரியவந்தது. இது தொடர்பாக அவரது உறவினர்கள் அயனாவரம் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளதை அடுத்து, அவர்களுக்கு போரூர் போலீஸார் தகவல் தெரிவித்தனர். பின்னர், அயனாவரம் போலீஸார் விரைந்து வந்து சிறுவனை மீட்டுச் சென்று, தாய் பிரியாவிடம் ஒப்படைத்தனர். புகாரின் பேரில், மகனைக் கொல்ல முயன்ற மோகன்ராஜை போலீஸார் தேடிவருகின்றனர்.

திருக்குறுங்குடி நம்பியாற்றில் குளித்த மாணவர் நீரில் மூழ்கி உயிரிழப்பு

களக்காடு, ஜூன் 2: திருநெல்வேலி மாவட்டம், திருக்குறுங்குடி மலைப் பகுதியில் உள்ள நம்பியாற்றில் ஞாயிற்றுக்கிழமை குளித்த பள்ளி மாணவர் பாறையில் இருந்து தவறி விழுந்ததில் நீரில் மூழ்கி உயிரிழந்தார். இதையடுத்து மலை நம்பி கோயிலுக்குச் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

வள்ளியூர் அருகேயுள்ள கோட்டைகருங்குளத்தைச் சேர்ந்த நம்பிராஜன் மகன் உதய சரவணன்(15). சமூகரெங்கபுரத்தில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் பயின்று வந்தார்.

இவர், தனது உறவினர்கள், நண்பர்களுடன் திருக்குறுங்குடி நம்பி கோயில் செல்லும் வழியில் உள்ள நம்பியாற்றில் ஞாயிற்றுக்கிழமை குளித்துக் கொண்டிருந்தார். அப்போது அவர் பாறையில் இருந்து தவறி விழுந்ததில் நீரில் மூழ்கி உயிரிழந்தார். தகவலறிந்த திருக்குறுங்குடி போலீஸார் சம்பவ இடத்துக்குச் சென்று மாணவர் உதயசரவணன் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இதுகுறித்து திருக்குறுங்குடி போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்து வருகின்றனர்.

மலை நம்பி கோயிலுக்குச் செல்லத் தடை....

திருக்குறுங்குடி மலைப் பகுதியில் உள்ள நம்பி கோயில் சூழல் சுற்றுலா தலத்துக்குச் செல்லவும், நம்பி கோயிலுக்குச் செல்லவும் திங்கள்கிழமை (ஜூன் 3) முதல் தடை விதிக்கப்படுகிறது. மறு உத்தரவு வரும் வரை இந்தத் தடை உத்தரவு தொடரும் என களக்காடு சரணாலய துணை இயக்குநரும், வன உயிரினக் காப்பாளருமான ரமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஓம்காரா அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட்

OMKARA ASSETS RECONSTRUCTION Pvt. Ltd.

CIN : U67100TZ2014PTC020363

பெருநிறுவன அலுவலகம் : கோஹினூர் ஸ்கொயர், 47 வது தளம், N.C. கெல்கர் மார்க், R.G. கட்காரி செளக், தாதர் (மேற்கு), மும்பை - 400 028 அலைபேசி எண் : +91 7558392736

[பிற்சேர்க்கை - IV-A] [பார்க்க - விதி 8(6) உடன் படிக்க - 9(1)க்கான விதி விலக்கு] | அசையா சொத்து விற்பனை செய்யப்படுவதற்கான மின்னணு ஏல விற்பனை பொது அறிவிப்பு

பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்க சட்டம் 2002 ("சர்ஃபாசி சட்டம்") மற்றும் பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) - உடன் படிக்க - 9(1) க்கான விதி விலக்கு - ன் கீழ் அசையா சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை பொது அறிவிப்பு

இதன் மூலம் பொது மக்களுக்கும் குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(களுக்கும்) அறிவிக்கப்படுவது யாதெனில், இதன் கீழ் விவரிக்கப்பட்ட ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு அடமானம் / கடன் பொறுப்பு ஏற்படுத்தப்பட்ட அசையா சொத்து, சிட்டி யூனியன் வங்கியின் அதிகாரப்பூர்வ அலுவலரால் 08.05.2015 அன்று அடையாள சுவாதீனம் எடுக்கப்பட்டுள்ளது. **மேலும், ஓம்காரா அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் (OARPL) ஆனது, 26.09.2016 தேதிய பணி ஒப்படைவு ஒப்பந்தத்தின் கீழ் சிட்டி யூனியன் வங்கி (CUB) (பணி ஒப்படைப்பவர்) மிடமிருந்து இதன் கீழ்க்கண்ட ஜாமீன் சொத்துக்களுடன் சேர்த்து இதன் கீழ்க்கண்ட கணக்குகளில் உள்ள மொத்த நிலுவைத்தொகைகளையும் அடைந்துள்ளது. அதனால், OARPL ஆனது பணி ஒப்படைப்பவரின் நிலையினை பெற்று, நிலுவைத்தொகைகளை வசூலிக்கவும், பிணைக்காப்பு அமலாக்கம் செய்யவும் அதிகாரம் பெற்றுள்ளது. OARPL ன் அதிகாரப்பூர்வ அலுவலர் நிலுவைத்தொகைகளை வசூலிப்பதற்காக, இதன் கீழ்க்குறிப்பிட்ட ஜாமீன் சொத்துக்களை விற்பனை செய்ய இதன் மூலம் உத்தேசித்துள்ளார்., அதனால் ஜாமீன் சொத்துக்களை வாங்குவதற்கான விலைப்புள்ளிகள் / விலைகோரல்களை மூடி முத்திரையிட்ட உறையிலிட்டு வரவேற்கப்படுகின்றன. இதன் கீழ்க்கண்ட அந்தந்த களத்தில் காண்பிக்கப்பட்டுள்ள ஜாமீன் பெற்று கடனளித்த OARPL க்கு அந்தந்த கடன்தாரர் மற்றும் கூட்டு கடன்தாரர்(களிடமிருந்து) நிலுவையாக உள்ள தொகைகளை வசூலிப்பதற்காக, இதில் குறிப்பிடப்பட்டுள்ள அடையாள சுவாதீனத்திலுள்ள சொத்துக்கள் சர்ஃபாசி சட்டம் 13(2) மற்றும் (4) ன் கீழான ஏற்பாடுகளின் கீழான அதிகாரத்தையும், உரிமைகளையும் செயலுறுத்தி "இருக்கின்ற இடத்தில்" "இருக்கின்ற நிலையில்" மற்றும் "இருக்கின்றவற்றுடன்" மற்றும் "திரும்ப பெறத்தகாதவாறு" என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.** கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள், ஜாமீன் சொத்துக்கள், பிரிவு 13(2) ன் கீழ் கோரிக்கை அறிவிப்பு அனுப்பிய தேதி, அடிப்படை விலை, விலைப்புள்ளி அதிகரிப்பு தொகை, டேவணித்தொகை, ஆய்வு தேதி மற்றும் நேரம் ஆகியன இதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள் பெயர்	ஜாமீன் சொத்து விபரங்களாவன	சொத்தின் உரிமையாளர்	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் கோரப்பட்ட தொகை	அடிப்படை விலை	விலைப்புள்ளி அதிகரிப்பு தொகை	டேவணித் தொகை / ஆய்வு தேதி மற்றும் நேரம்
1). சக்சஸ் ஏஜென்சீஸ் (கடன்தாரர்) 2). திருமதி ரோஸ் மேரி (உரிமையாளர்) 3). திரு P.A. ஜெயராஜ் (ஜாமீன்தாரர்) 4). திரு P.J. கில்பர்ட் (ஜாமீன்தாரர்)	கோயமுத்தூர் பதிவு மாவட்டம், கோயமுத்தூர் சார்பதிவு மாவட்டம், கோயமுத்தூர் தாலுக்கா, அனுப்பர்பாளையம் கிராமம், T.S. எண் (புதியது) 426, பழைய எண். 37, வார்டு எண். 09 ல் திருமதி M. ரோஸ் மேரி என்பவருக்கு சொந்தமானதும், **பின்வரும் எல்லைகளுக்கு** மத்தியிலும் அதாவது **வடக்கு** - தாமோதரசாமி நாயுடு வீடு, **தெற்கு** - ராமசாமி கவுண்டர் வீடு, **கிழக்கு** - பெருமாள்சாமி நாயுடு வீடு, **மேற்கு** - நஞ்சப்ப ஆச்சாரி வீடு., இவைகளுக்கு மத்தியில் உள்ள 6-1/2 செண்ட் பரப்பளவு கொண்ட இடம் மற்றும் அதில் கிழக்கு பார்த்து கட்டப்பட்ட ஓட்டுவில்லை வீடு, கதவுகள், ஜன்னல்கள், மின், தண்ணீர் இணைப்பு மற்றும் அனைத்து இதர வசதிகள் ஆகியன. இச்சொத்து கோயமுத்தூர் மாநகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளது. மேற்குறிப்பிட்ட சொத்தின் அஞ்சல் முகவரி - எண். 139, விவேகானந்தா சாலை, ராம்நகர், கோயமுத்தூர் - 641 009. இடத்தின் பரப்பு 6-1/2 செண்ட் மற்றும் அதில் கட்டப்பட்ட குடியிருப்பு கட்டிடம் ஆகியன.	திருமதி ரோஸ் மேரி	தேதி : 28.01.2015 தொகை:01.01.2015ம் தேதியின் படி, ரூ. 46,92,136/- (ரூபாய் நாற்பத்து ஆறு இலட்சத்து தொண்ணூற்று இரண்டாயிரத்து நூற்று முப்பத்து ஆறு மட்டும்)	ரூ. 1,26,68,000/-	ரூ. 1,27,000/-	ரூ. 12,66,800/- அடையாள சுவாதீனத்தில் உள்ளது.

கணக்கு எண் - 37644285876, பயனாளி பெயர் - Omkara Assets Reconstruction Pvt Ltd, வங்கி பெயர் - ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா, குர்லா மேற்கு, மும்பை - 400 070 IFSC Code : SBIN0001886

மின்னணு ஏல தேதி & நேரம் - 21.06.2024 (வெள்ளிக்கிழமை) காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை

விலைப்புள்ளிகள், பங்கேற்பு கடிதம் / KYC ஆவணங்கள் / டேவணித்தொகைக்கான சான்று ஆகியவற்றை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி மற்றும் நேரம் - 20.06.2024 (வியாழக்கிழமை மாலை 06.00 மணி வரை.

ஏலத்துக்கான விதிகள் மற்றும் நிபந்தனைகள் : விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு வலைதளம் **http://omkaraarc.com/auction.php-ல்** கொடுக்கப்பட்டுள்ள தொடர்பை தயவு கூர்ந்து பார்வையிடவும். ஏலமானது OARPL மூலம் ஆன்லைனில் நடத்தப்படும். DD / பே ஆர்டர் (அசல்) அல்லது NEFT/RTGS மூலம் செலுத்தப்பட்ட டேவணித்தொகையுடன் கூடிய விலைப்புள்ளிகளை (ஆன்லைன் மற்றும் காகித வடிவம்) சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி - 20.06.2024 மாலை 06.00 மணி. டேவணித்தொகை செலுத்திய விருப்பமுள்ள ஏலதாரர்கள் உள்நுழை அடையாளம் & கடவுச்சொல் ஆகியவற்றை உருவாக்குவதிலும், தரவுகளை பதிவேற்றம் செய்வதிலும், விலைப்புள்ளி சமர்ப்பித்தலிலும், மின்னணு ஏல விலைகோரல் முறைக்கான பயிற்சிக்கும் மின்னணு ஏல சேவைதாரர் **"M/s. C1 India Pvt. Ltd" யை உதவிக்கான தொலைபேசி எண் : +91-7291981124/25/26, உதவிக்கான மின்னஞ்சல் முகவரி : support@bankeauctions.com மற்றும் சொத்து தொடர்பான விசாரணைகளுக்கு அதிகாரப்பூர்வ அலுவலர், திரு சுபோதாப் பானர்ஜி, அலைபேசி எண் : +91 7558392736, மின்னஞ்சல் முகவரி : s.banerjee@omkaraarc.com-ல்** அனைத்து வேலை நாட்களிலும் வேலை நேரத்தில் தொடர்பு கொள்ளவும். விருப்பமுள்ள ஏலதாரர்கள் திவால் மற்றும் நொடிப்புநிலை சட்டம் 2016 ன் பிரிவு 29A க்கு கட்டுப்பட்டு அறிவிக்கை சமர்ப்பிக்க வேண்டும்., மேலும் விரிவான விபரங்களுக்கு விதிகள் மற்றும் நிபந்தனைகளை தயவு கூர்ந்து பார்வையிடவும்.

பிணைக்காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) உடன் படிக்க - 9(1) ன் கீழ் விற்பனைக்கான சட்டபூர்வ அறிவிப்பு

இவ்வறிவிப்பானது, மேற்சொன்ன கடன் கணக்குக்கான கடன்தாரர்(களுக்கு) பிணைக்காப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு, பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) சட்டம் 2002 ன் கீழான ஏற்பாடுகள் மற்றும் பிணைக்காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) உடன் படிக்க - 9(1) ன் கீழ், மின்னணு ஏலம் மூலம் மேற்குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்திற்குள் அவைகளால் விரும்பப்படும் பட்சத்தில், இதன் மேற்குறிப்பிட்ட நிலுவைத்தொகையை செலவுகள் மற்றும் கட்டணங்களுடன் திருப்பி செலுத்தி, சொத்துக்களை மீட்டுக்கொள்ளும் அறிவுறுத்தலுடன் (அவ்வாறு திருப்பி செலுத்த தவறும் பட்சத்தில்) நடத்தப்படும் ஏலம் / விற்பனை மூலம், அதிகாரப்பூர்வ அலுவலர் / ஜாமீன் பெற்று கடனளித்தவரின் அதிகார வரம்பில் பிணைக்காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(5) ல் பரிந்துரைக்கப்பட்ட ஏதேனும் முறையில் சொத்து விற்பனை செய்யப்படும் என்பதை தெரிவித்து வழங்கப்படும் (15) பதினைந்து நாட்களுக்கு குறைவில்லாது வழங்கப்பட வேண்டிய கட்டாய அறிவிப்பாகும்.

தேதி : 03.06.2024
இடம் : மும்பை

ஒப்பம்/-
அதிகாரப்பூர்வ அலுவலர், ஓம்காரா அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட்

கடலூர் தென்பெண்ணை ஆற்றில் பாய்ந்து மூழ்கிய கார்: 5 பேர் தப்பினர்

பொக்லைன் இயந்திரம் மூலம் மீட்கப்படும் கடலூர் தென்பெண்ணை ஆற்றில் மூழ்கிய கார்.

நெய்வேலி, ஜூன் 2: கடலூரில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரே உள்ள தென்பெண்ணையாற்றில் சனிக்கிழமை இரவு கார் மூழ்கி விபத்துக்குள்ளானது. காரில் பயணம் செய்த 5 பேர் கண்ணாடியை உடைத்து வெளியேறி உயிர் பிழைத்தனர்.

கடலூரில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் தென்பெண்ணை ஆறு பாய்கிறது. இந்த ஆற்றின் குறுக்கே புதுவை மாநிலத்தை இணைக்கும் தரைப்பாலம் உள்ளது.

இதன் வழியாக சனிக்கிழமை இரவு சுமார் 10.45 மணியளவில் கார் சென்று கொண்டிருந்தது. அப்போது, கடலூரில் இடி, மின்னலுடன் பலத்த மழை பெய்ததால், தரைப்பாலத்தில் சென்ற கார் கட்டுப்பாட்டை இழந்து தென்பெண்ணை ஆற்றுக்குள் பாய்ந்து நீரில் மூழ்கியது. காரில் பயணித்த 5 பேர் தண்ணீரில் மூழ்கி தத்தளித்தனர். பின்னர், அவர்கள் கார் கதவின் கண்ணாடியை உடைத்து வெளியேறி ஆற்று நீரில் நீந்தி உயிர் தப்பினர்.

இதுகுறித்து தகவலறிந்த ரெட்டிச்சாவடி போலீஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணை நடத்தினர். இதில், கள்ளக்குறிச்சி மாவட்டத்தைச் சேர்ந்த சிவபாலன் (35), சுந்தர்ராஜன் (45) உள்ளிட்ட 5 பேர் கடலூரில் நடைபெற்ற திருமண விழாவில் காரில் வந்து பங்கேற்றுவிட்டு, புதுவை மாநிலம், வில்லியனூருக்கு கொமந்தான்மேடு வழியாக செல்ல முயன்றபோது விபத்தில் சிக்கியது தெரிய வந்தது. இதுகுறித்து ரெட்டிச்சாவடி போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். ஆற்றுக்குள் மூழ்கிய கார் ஞாயிற்றுக்கிழமை காலை பொக்லைன் இயந்திரம் மூலம் மீட்கப்பட்டது.

பெயர் மாற்றம்

எனது மகள், பர்சா பாத்திமா முஹம்மது பஷீர் (Barza Fathimma Mohammed Basheer) த/பெ. முஹம்மது பஷீர், பிறந்த தேதி : 15.02.2008, (பிறந்த இடம் : தேவர்சோலை), க/எண் : 11/281a4v, கல்கோரி, டி.கே பேட்டை, கூடலூர் பஜார் அஞ்சல், கூடலூர் தாலூக்கா, நீலகிரி மாவட்டம் - 643212. என்ற முகவரியில் வசித்து வரும் எனது மகள் (கடவுசீட்டு எண் : R8590654) பெயரை பர்சா பாத்திமா (Barza Fathima) என மாற்றிக்கொண்டேன். இனி மேற்கொண்டு பர்சா பாத்திமா (Barza Fathima) என அழைக்கப்படுவாள்.

முஹம்மது பஷீர் (தந்தை)

அறிவிப்பு

சுந்தரம் மியூச்சுவல் — சுந்தரம் பைனான்ஸ் குரூப் —

வருமானப் பகிர்வு மற்றும் மூலதனம் திரும்பப் பெறுவதற்கான பதிவு தேதி (IDCW)

சுந்தரம் மியூச்சுவல் ஃபண்டின் அறங்காவலரான சுந்தரம் டிரஸ்டி கம்பெனி லிமிடெட், பின்வரும் திட்டங்களின் கீழ் ரூ. 10/– மற்றும் ரூ. 1000/– முக மதிப்பில் வருமானப் பகிர்வு மற்றும் மூலதனத் திரும்பப் பெறுதலை (IDCW) அறிவித்துள்ளது என்று இதன்மூலம் அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது:

திட்டத்தின் பெயர்	திட்டம் - விருப்பம்	பதிவு தேதி#	IDCW தொகை* (ஒரு யூனிட்டுக்கு ரூ.)	ஒரு யூனிட்டுக்கு NAV மே 24, 2024 (ரூ.) அன்று
சுந்தரம் லோ டியுரேஷன் ஃபண்ட்	வழக்கமான காலாண்டு- IDCW	ஜூன் 05, 2024	7.500	1164.4279
	நேரடி காலாண்டு- IDCW		7.500	1196.8223
சுந்தரம் லிக்யூட் ஃபண்ட்	வழக்கமான காலாண்டு- IDCW		7.500	1109.3716
	நேரடி காலாண்டு- IDCW		7.500	1112.3845
சுந்தரம் அல்ட்ரா ஷார்ட் டியுரேஷன் ஃபண்ட்	வழக்கமான காலாண்டு- IDCW		7.500	1123.5407
	நேரடி காலாண்டு- IDCW		7.500	1158.3001
சுந்தரம் ஷார்ட் டியுரேஷன் ஃபண்ட்	வழக்கமான காலாண்டு- IDCW		0.075	13.9796
	நேரடி காலாண்டு- IDCW		0.075	14.2166
சுந்தரம் கார்ப்ரேட் பாண்ட் ஃபண்ட்	வழக்கமான காலாண்டு- IDCW		0.075	18.1709
	நேரடி காலாண்டு- IDCW		0.075	18.6989
சுந்தரம் மணி மார்க்கேட் ஃபண்ட்	வழக்கமான காலாண்டு- IDCW		0.075	12.109
	நேரடி காலாண்டு- IDCW		0.075	12.1729
சுந்தரம் கன்சர்வேடிவ் ஹைபிரிட் ஃபண்ட்	வழக்கமான காலாண்டு- IDCW		0.075	18.1558
	நேரடி காலாண்டு- IDCW		0.075	19.9039
சுந்தரம் மீடியம் டியுரேஷன் ஃபண்ட்	வழக்கமான காலாண்டு- IDCW		0.075	12.8459
	நேரடி காலாண்டு- IDCW		0.075	25.5831

அல்லது குறிப்பிட்ட தேதி வணிகம் அல்லாத நாளாக இருந்தால் அடுத்தடுத்த வணிக நாள்.
* வருமானப் பகிர்வு செய்யப்படும் / IDCW செலுத்தப்படும், வரியின் நிகராக மூலத்தில் பிடித்தம் செய்யப்படும்.

IDCW செலுத்துதலின் படி, திட்டத்தின் NAV, பொருந்தினால், செலுத்துதல் மற்றும் சட்டப்பூர்வ லெவி அளவிற்கு குறையும். IDCW கொடுப்பனவு ஒரு யூனிட்டுக்கு மேலே குறிப்பிட்டுள்ள IDCW அளவிற்கு அல்லது மேலே குறிப்பிட்டுள்ள பதிவு தேதியில், எது குறைவாக இருந்தாலும் விநியோகிக்கக்கூடிய உபரியின் அளவிற்கு இருக்கும். கடந்த கால செயல்திறன் எதிர்காலத்தில் நிலைத்திருக்கலாம் அல்லது இல்லாமல் இருக்கலாம். மேற்கூறிய திட்டங்களின் IDCW விருப்பத்தின் கீழ் உள்ள அனைத்து யூனிட்ஹோல்டர்களும், மேற்கூறிய பதிவு தேதியில் யூனிட்ஹோல்டர்களின் பதிவேட்டில் அவர்களின் பெயர் தோன்றும், IDCW பெற உரிமை உண்டு. IDCW இன் மேற்கூறிய அளவு மற்றும் பதிவு தேதி ஆகியவை மே 31, 2024 தேதியிட்ட சுற்றறிக்கைத் தீர்மானத்தின்படி சுந்தரம் டிரஸ்டி கம்பெனி லிமிடெட்டின் இயக்குநர்கள் குழுவால் அங்கீகரிக்கப்பட்டது.

சுந்தரம் அசெட் மேனேஜ்மென்ட் கம்பெனி லிமிடெட்டுக்காக,

ரா. அஜித் குமார்
செயலாளர் & கம்ப்ளையன்ஸ் ஆபீசர்

இடம்: சென்னை
தேதி: ஜூன் 03, 2024

மேலும் தகவலுக்கு, தொடர்பு கொள்ளவும்:
சுந்தரம் அசெட் மேனேஜ்மென்ட் கம்பெனி லிமிடெட்
(சுந்தரம் மியூச்சுவல் ஃபண்டின் முதலீட்டு மேலாளர்)
CIN: U93090TN1996PLC034615

கார்ப்பரேட் அலுவலகம் 1வது & 2வது தளம், சுந்தரம் டவர்ஸ், 46, ஒயிட்ஸ் சாலை, ராயப்பேட்டை, சென்னை 600 014.
தொடர்புக்கு: 1860 425 7237 (இந்தியா), 044 4083 1500 (வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கு)
ஃபேக்ஸ்: +91 44 2841 8108. www.sundarammutual.com
பதிவு அலுவலகம்: எண். 21, பட்டுலோஸ் சாலை, சென்னை – 600 002.

மியூச்சுவல் ஃபண்ட் முதலீடுகள் சந்தை அபாயங்களுக்கு உட்பட்டவை, திட்டம் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் கவனமாக படிக்கவும்.

வேன் கவிழ்ந்து ஒருவர் உயிரிழப்பு; 23 பேர் காயம்

கள்ளக்குறிச்சி பாண்டியங்குப்பம் அருகே ஞாயிற்றுக்கிழமை சாலையோரத்தில் கவிழ்ந்த சுற்றுலா வாகனம்.

கள்ளக்குறிச்சி, ஜூன் 2: கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் அருகே ஞாயிற்றுக்கிழமை வேன் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்தார். 23 பேர் காயமடைந்தனர்.

சின்னசேலம் வட்டம், நாககுப்பத்தைச் சேர்ந்த 24 பேர் நாமக்கல் மாவட்டம், கொல்லிமலைக்கு ஞாயிற்றுக்கிழமை காலை வேனில் சுற்றுலா சென்றனர். சின்னசேலத்தை அடுத்த கூகையூரைச்சேர்ந்த குழந்தைவேல் மகன் ஆனந்தகுமார் வேனை ஓட்டினார்.

நாககுப்பம்-பாண்டியங்குப்பம் சாலையில் சென்றபோது, திடீரென ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்த வேன் சாலையோரத்தில் கவிழ்ந்தது. அதில் பயணித்த 24 பேரும் காயமடைந்தனர்.

தகவலறிந்த அந்தப் பகுதி மக்கள் விபத்தில் சிக்கியவர்களை மீட்டு அவசர ஊர்தி மூலம் கள்ளக்குறிச்சி மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். ஆனால், வழியிலேயே தர்மலிங்கம் மகன் மணிமாறன் (31) உயிரிழந்தார். இதுகுறித்த புகாரின் பேரில், சின்னசேலம் போலீஸார் வழக்குப் பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.